**இரண்டாவது கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், நாகர்கோவில்.**

**O.S. No. 23/2023**

**Date : 16.04.2026**

**வா.சா. 1 - நாகேந்திரன்**

**Solemnly affirmed in accordance with the Provision of Act X of 1873.**

**4 ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை.**

வழக்கு பட்டிகை சொத்தினை அரசு புறம்போக்கிலிருந்து அகற்ற வேண்டும் என்று அதிகாரிகளுக்கு ஆணையிட்டு மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றம் மதுரை கிளை 28.10.2022 அன்று நீதிப்போராணை மனுவில் உத்தரவு பிறப்பித்துள்ளது என்றால் சரியல்ல. மேற்படி உத்தரவை அரசு அதிகாரிகள் செயல்படுத்தாத காரணத்தினால் அவர்கள் மீது நீதிமன்ற அவமதிப்பு மனு எண் 1483/2023 தாக்கல் செய்யப்பட்டு வரும் 26.04.2026 அன்று நீதிமன்றம் வாய்தா கொடுத்துள்ளது என்றால் அது எனக்கு பொருந்தாது. மேற்படி உத்தரவு விஜயன், தேவி, முருகவேலின் தந்தை, முருகவேல் மற்றும் ஈஸ்வரி ஆகியோர்களுக்கும் மட்டும் தான் மேற்படி உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

மேற்படி மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றம் மதுரை கிளை 28.10.2022 அன்று நீதிப்போராணை மனுவில் பிறப்பித்த உத்தரவில் குறிப்பிடப்பட்ட சர்வே எண் தான் வழக்கு பட்டிகை சொத்தின் சர்வே எண் என்றால் சரிதான். ஆகையால் மேற்படி உத்தரவு என்னை கட்டுப்படுத்தும் என்றால் சரியல்ல.

மேற்படி உத்தரவு என்னை கட்டுப்படுத்தாது என்று கோரி மேற்படி மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றம் மதுரை கிளையில் ஏதேனும் மனு தாக்கல் செய்தேனா என்றால் இல்லை. மேற்படி மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றம் மதுரை கிளையில் பிறப்பிக்கப்பட்ட உத்தரவை மறைத்து தான் இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால்

சரிதான். மேற்படி மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றம் மதுரை கிளை பிறப்பித்த உத்தரவு என்னை கட்டுப்படுத்தும் நான் நீதிமன்றத்தை ஏமாத்துகிறேன் என்றால் சரியல்ல. ஆகவே கூடுதலாக சேர்க்கப்பட்ட கட்சிக்காரர்களின் நீதிமன்ற செலவை நான் தான் ஏற்க வேண்டும் என்றால் சரியல்ல. இவ்வழக்கில் நான் கேட்டுள்ள பரிகாரம் எனக்கு கிடைக்கத்தக்கதல்ல இவ்வழக்கை தள்ளுபடி செய்ய வேண்டும் என்றால் சரியல்ல.

**4 ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை முடிக்கப்படுகிறது.**

**1 முதல் 3 ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணைக்காக வழக்கு ஒத்தி வைக்கப்படுகிறது.**